# இலங்கை - ஐக்கிய அமெரிக்க பங்காளித்துவ உரையாடல் தொடர்பில் ஐக்கிய அமெரிக்க இராஜாங்க திணைக்களம் மற்றும் இலங்கையின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு வெளியிட்டுள்ள கூட்டு அறிக்கை

## 2017 நவம்பர் 6 ஆந் திகதி

சனநாயகம், சட்ட ஆட்சி மற்றும் எமது நாட்டு மக்களின் வாய்ப்புவளம் மற்றும் நல்வாழ்வு ஆகியவற்றுக்கான உறுதிப்பாட்டினை பகிரும் வகையில், இலங்கை மற்றும் ஐக்கிய அமெரிக்கா 2017 நவம்பர் மாதம் 6 ஆந் திகதியன்று கொழும்பில் இரண்டாவது பங்காளித்துவ உரையாடலை நடாத்தியிருந்தது. இந்த சந்திப்பானது, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் பிரசாத் காரியவசம் மற்றும் அரசியல் விவகாரங்களுக்கான ஐக்கிய அமெரிக்க உதவிச் செயலாளர் தோமஸ் ஷன்னோன் ஆகியோரினால் தலைமை தாங்கப்பட்டுள்ளது. இந்த கூட்டு பேச்சுவார்த்தையில் ஐக்கிய அமெரிக்கா மற்றும் இலங்கை ஆகியவற்றுக்கிடையிலான ஒத்துழைப்பு வலியுறுத்தப்பட்டதுடன், வழக்கமான மற்றும் கட்டமைக்கப்பட்ட ஈடுபாடு ஊடாக பரந்த அடிப்படையில் இருதரப்பு உறவுகளையும் மேலும் வலுப்படுத்தும் வகையில் அமைந்திருந்தது.

சக சனநாயகவாதிகள் என்ற வகையில், இலவச மற்றும் திறந்த இந்திய-பசுபிக் பிராந்தியம் மற்றும் உலகம் முழுவதும் சமாதானம் மற்றும் நிலைபேற்றுநிலை நோக்கி கூட்டாக பணியாற்றுவது என இருநாட்டு அரசாங்கங்களும் தீர்மானம் எடுத்துள்ளன. அனைத்து நாடுகளும் சர்வதேச சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் அனுபவிப்பதை உறுதிப்படுத்தக்கூடிய விதிமுறைகள் அடிப்படையிலான ஆணை, ஊக்குவிப்பு ஊடாக இந்திய சமுத்திரத்தின் பாதுகாப்பு, நிலைபேற்றுநிலை மற்றும் வாய்ப்புவளம் பாதுகாக்கப்படல் வேண்டும் என்பதை ஐக்கிய அமெரிக்காவும், இலங்கையும் ஏற்றுக்கொண்டிருந்தன. பிராந்திய மற்றும் சர்வதேச ரீதியில் சமாதானம் மற்றும் நிலைபேற்றுநிலைக்கான தொலைநோக்கினை மேம்படுத்துவதற்கு இரு நாடுகளும் ஒப்புக்கொண்டதுடன், கடற்செலவு மற்றும் வான் பறத்தல் சுதந்திரம் மற்றும் தடையற்ற வர்த்தகம் உள்ளடங்கலாக சட்ட விதியின் அடிப்படையிலமைந்த கடற்படை ஆணையை பராமரிப்பதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தியுள்ளனர். மேலும் கடற்கொள்ளை எதிர்ப்பு அளவுகோல்கள் உள்ளடங்கலாக, சமுத்திர பாதுகாப்பினை பகிர்ந்து கொள்ளல் மற்றும் ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்கான விருப்பையும் அவர்கள் பகிர்ந்து கொண்டனர். தீவுத்தேசம் என்ற வகையில், அதன் சொந்த எல்லைகள் மற்றும் கடல் வளங்களை பாதுகாக்கும் நடவடிக்கைகளை செயற்தகு முறையில் முன்னெடுக்கக்கூடிய வகையில் கடல்சார்ந்த கொள்திறனை கட்டியெழுப்புவதற்கான தேவையை இலங்கை வலியுறுத்தியுள்ளது.

பிராந்திய வளர்ச்சிக்கு முக்கிய காரணியாக விளங்கும் இலவச மற்றும் திறந்த சமுத்திரம் ஊடாக ஆசியா, இந்தியா, மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஆபிரிக்கா நாடுகள் மத்தியில் வர்த்தகப் பாய்ச்சலை இணைக்கின்ற ஆசியாவில், வர்த்தகம் மற்றும் முதலீடுகளுக்கான பிராந்திய மையமாக இலங்கையை அபிவிருத்தி செய்வது குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளன. வர்த்தகம், முதலீடு, வெளிநாட்டு உதவிகள் மற்றும் நாடு முழுவதும் உள்ள பங்குதாரர்களுடனான நேரடியான பங்காளித்துவம் ஊடாக இலங்கைக்கு தமது ஆதரவை வழங்கவுள்ளதையும் ஐக்கிய அமெரிக்கா வெளிப்படுத்தியுள்ளது. இலங்கையுடன் வலுவான பொருளாதார பங்காளித்துவத்தையும், உறுதியான வர்த்தக உறவையும் ஐக்கிய அமெரிக்கா கொண்டுள்ளது.

2016 பெப்ருவரி மாதம் ஆரம்ப பங்காளித்துவ உரையாடல்கள் நடைபெற்றது முதல் இலங்கை மற்றும் ஐக்கிய அமெரிக்க இருதரப்பு உறவுகளில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதில் சட்டத்தை நடைமுறைப்படுத்தல், போதைவஸ்து எதிர்ப்பு, பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் சட்டவிதி மற்றும் வெளிப்படைத்தன்மையை வலுப்படுத்துவதற்காக நிதி

மற்றும் கடன் சவால்களை அடையாளப்படுத்த உதவுவதற்காக திறைசேரி மற்றும் நீதித்திட்டங்களுக்கான ஐக்கிய அமெரிக்கத் திணைக்களங்களை நிறுவுதல் ஆகியவற்றுக்கான ஒத்துழைப்பு உள்ளடக்கப்பட்டுள்ளன. ஐக்கிய அமெரிக்காவின் உயர்மட்ட பிரதிநிதிகளின் இலங்கை விஜயம் மற்றும் அதிமேதகு சனாதிபதி, மாண்புமிகு பாராளுமன்ற சபாநாயகர் மற்றும் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் ஆகியோரின் ஐக்கிய அமெரிக்காவிற்கான விஜயங்கள் ஆகிய ஒருசில முக்கியமான உத்தியோகபூர்வ விஜயங்களும் இடம்பெற்றுள்ளன.

இலங்கையில் வலுவான இருதரப்பு உறவுகள் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் ஆழமான ஈடுபாட்டின் அடையாளமாக, சட்டமன்ற அறிவிப்பு பூர்த்தியடைந்ததும் இலங்கை கடற்படைக்கு இரண்டாவது கடலோர பாதுகாப்பு கப்பலை வழங்கவுள்ளதாக ஐக்கிய அமெரிக்கா அறிவித்துள்ளது. இந்த செயலாளர் வகுப்பு உயர் தரமிக்க கப்பலானது, இலங்கையை அதன் கடலோரங்கள் மற்றும் பிரத்தியேக பொருளாதார வலயத்தை திறம்பட காவல் செய்யவும், அதன் வர்த்தக மற்றும் தொடர்பாடலின் சமுத்திர எல்லையை பாதுகாக்கவும் வழிவகுக்கும். மேலும் ஐக்கிய அமெரிக்காவானது, இலங்கையின் ஆங்கில வகுப்புகளுக்கு ஐக்கிய அமெரிக்க அமைதிப்படை தொண்டர்களை மீள அனுப்புவதற்காக இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றவுள்ளது. உற்பத்தித்திறன், பாலின் தரம், நிதி, உணவுப் பாதுகாப்பு மற்றும் வர்த்தகம் ஆகியவற்றை மேம்படுத்தி இலங்கையின் பால் துறையை வலுப்படுத்தி நவீனமயப்படுத்துவதற்காக விவசாய உணவுக்கான ஐக்கிய அமெரிக்க திணைக்களத்தின் முன்னேற்ற திட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள 21 மில்லியன் அமெரிக்க டொலர்/3,150,000,000 இலங்கை ரூபாய் திட்டம் குறித்தும் ஐக்கிய அமெரிக்கா அறிவித்துள்ளது. இலங்கையின் நிதி உதவிக்கான மில்லேனிய சவால் நிறுவன ஒப்பந்தத்தின் அபிவிருத்திப் பணிகள் 2017-2018 ஆம் ஆண்டுகளில் முன்னெடுக்கப்படவுள்ளன.

இலங்கை கடற்படைப் பிரிவை நிறுவ உதவுதல், நிபுணத்துவமிக்க இராணுவக் கல்வியை வழங்க இலங்கை படையினரை ஐக்கிய அமெரிக்காவுக்கு அனுப்புதல், ஒருசில இருதரப்பு பயிற்சிகள் மற்றும் கப்பல் விஜயங்கள் மற்றும் இரு நாடுகளிலுமுள்ள மிகச்சிறந்த இராணுவ அதிகாரிகளுக்கிடையிலான ஈடுபாடுகள் ஆகியவற்றில் ஐக்கிய அமெரிக்காவின் கடற்படை வீரர்களின் பங்கு உள்ளடங்கலாக, இருதரப்பு மற்றும் பிராந்திய மூலோபாய நலன்களுக்காக இராணுவ ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கு இருநாடுகளுமே ஒப்புக்கொண்டுள்ளன.

நீடித்த சமாதானத்தை அடைந்து கொள்வதற்கான நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றை ஊக்குவிக்கும் இலங்கையின் உறுதிப்பாட்டினை மீள் உறுதி செய்து 2017 மார்ச் மாதம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அதன் துணை அனுசரணையை இலங்கை மற்றும் ஐக்கிய அமெரிக்கா நினைவுப்படுத்தியது. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் ஒப்புக்கொண்ட உண்மையைக் கண்டறிதல், நீதி, இழப்பீடுகள் மற்றும் மீள நிகழாமைக்கான உத்தரவாதங்கள், காணாமல்போனோரின் குடும்பங்களுக்கு மறுமொழியளித்தல் மற்றும் பாதுகாப்பு நிறுவனங்களின் நிபுணத்துவத்தை மேம்படுத்துவதற்கு பொருத்தமான சீர்திருத்தங்களை செயல்படுத்தல் ஆகிய உறுதிப்பாடுகளை செயல்படுத்தலுக்கு தமது ஆதரவினை இலங்கைக்கு வழங்கவுள்ளதாக ஐக்கிய அமெரிக்கா அறிவித்துள்ளது. நல்லிணக்க நடவடிக்கைகளுக்கான ஆதரவு ஊடாக இலங்கை மக்களின் விருப்பைப் பிரதிபலிக்கும் இந்த உறுதிப்பாடுகளை செயல்படுத்துவதில் இலங்கை அரசாங்கத்தை, சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க உதவி(USAID) வழிநடத்தவுள்ளது.

சனநாயகம், சனநாயக நிறுவனங்கள் மற்றும் நடைமுறைகள், நல்லாட்சி, சட்ட விதிமுறை, நீதி, நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் பாராளுமன்ற நடைமுறைகள் ஆகியவற்றை வலுப்படுத்துவதற்கான இலங்கை அரசாங்கத்தின் உறுதியளிப்பு வலியுறுத்தப்பட்டுள்ளது. அரசியலமைப்பு சீர்திருத்தம், பாதுகாப்பு படையினர் வசமுள்ள தனியார் காணிகளை விடுவித்தல், காணாமல் போனோருக்கான சுயாதீன மற்றும் நிலையான அலுவலகத்தை அமைத்தல் ஆகிய பிரிவுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை ஐக்கிய அமெரிக்கா வரவேற்றுள்ளது.

இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் நல்லிணக்கம், சட்ட விதிமுறை மற்றும் நீதித்துறை சீர்திருத்த முயற்சிகளுக்கிணையாக, இருதரப்பு பாதுகாப்பு பிரிவு ஒத்துழைப்பும் தொடரப்படவுள்ளது. இதில் கண்ணிவெடிகளை அகற்றுதல், கூட்டு இராணுவ ஈடுபாடுகள், இலங்கை அதிகாரிகளுக்கான மனித உரிமைகள் பயிற்சி, கப்பல்கள் மற்றும் இராணுவ அதிகாரிகளின் வருகை ஆகியவற்றுக்கான ஐக்கிய அமெரிக்காவின் ஆதரவு ஆகியவை உள்ளடக்கப்பட்டுள்ளன.

உலகளாவிய பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ள ஐஎஸ்ஐஎஸ் தீவிரவாத குழுக்கள் தொடர்பான தமது கரிசனையை இலங்கையும், ஐக்கிய அமெரிக்காவும் பகிர்ந்து கொண்டுள்ளன.

வட கொரியாவின் சட்ட விரோதமான அணுசக்தி மற்றும் ஏவுகணைத் திட்டங்களினால் சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் குறித்தும், வட கொரியா மீது அனைத்து ஐக்கிய நாடுகள் உறுப்பினர்களும் அழுத்தம் செலுத்த வேண்டியதன் முக்கியத்துவத்துவம் குறித்தும், இது தொடர்பாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை தீர்மானங்களின் முழுமையான செயல்முறைப்படுத்தல் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளன.

2017 ஓகத்து முதல் செத்தெம்பர் மாதம் வரை இலங்கையினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்து சமுத்திர பிராந்திய மாநாடு குறித்து இருநாடுகளுமே தங்களது திருப்தியை வெளிப்படுத்தியதுடன், இந்திய-பசுபிக் பிராந்தியத்தில் பாதுகாப்பு, நிலைபேற்றுநிலை, வெளிப்படைத்தன்மை மற்றும் பொருளாதார வாய்ப்பினை மேம்படுத்தக்கூடிய கூட்டு திட்டங்களை தொடர்ந்து முன்னெடுப்பதற்கும் இணங்கியுள்ளன.

ஐக்கிய அமெரிக்காவும், இலங்கையும் தமது இருதரப்பு உறவுகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியதுடன், பரஸ்பர நலன்களுக்காக ஐக்கிய அமெரிக்கா - இலங்கை பங்காளித்துவத்தை வலுப்படுத்துவதற்கான தமது உறுதிப்பாட்டினையும் வெளிப்படுத்தியுள்ளன.

1948 ஆம் ஆண்டு சுதந்திரத்தைத் தொடர்ந்து இலங்கையை அடையாளப்படுத்திய முதன்மையான ஒருசில நாடுகளில் ஐக்கிய அமெரிக்காவும் ஒன்றாகும். 2018 ஆம் ஆண்டு இலங்கை மற்றும் ஐக்கிய அமெரிக்காவுக்கிடையிலான இராஜதந்திர உறவுகளின் 70 வருடப் பூர்த்தியை முன்னிட்டு தமது ஈடுபாடு மற்றும் பரஸ்பர ஆதரவை அதிகரிப்பதை நோக்கி பணியாற்றுவதற்கான அர்ப்பணிப்பை இருநாடுகளும் மீள உறுதிப்படுத்திக் கொண்டுள்ளன.